# முன்னுரை

நானும் நீங்களும் ‘ஓ’ பக்கங்களும்

அக்டோபர் 2005ல் நான் ‘ஓ’ பக்கங்களை ஆனந்தவிகடன் இதழில் எழுதத் தொடங்கியபோது, ஏன் இதற்கு ’ஓ’ பக்கங்கள் என்று பெயரிட்டேன் என்பதைத் தெரிவித்திருந்தேன்.

‘தமிழில் இருக்கும் ஒற்றை எழுத்துச் சொற்களில் என்னை நீண்ட நாட்களாக வசீகரிக்கும் சொல் ‘ஓ’!

மற்ற ஒற்றை எழுத்துச் சொற்களான ஆ.ஈ.ஊ.ஏ.ஐ. எல்லாம் குறைவான அர்த்தமும், தொனியும் உடையவை. ‘ஓ’ ஒன்றுதான் இடத்துக்கு ஏற்ப பல மாறுபட்ட தொனிகளில் பயன்படுத்தக் கூடியது. எழுத்தாளர்களில் ஜெயகாந்தன் ஒருவர்தான் ‘ஓ’வை இப்படி வெவ்வேறு தொனிகளில் கையாண்டிருக்கிறார். (‘ஓ’, கோகிலா என்ன செய்துவிட்டாள்?’)

நம்முடைய வீட்டுக்குள்ளும், வெளியிலும், ‘ஓ’ விஷயங்கள் நிறையவே இருக்கின்றன. (கவனியுங்கள். ‘ஓ’ போடுவதற்கான விஷயங்கள் என்று சொல்லவில்லை. அப்படிச் சொன்னால் அர்த்தமே மாறிவிடும். அதுதான் ‘ஓ’வின் சிறப்பு. அத்துடன் சேருகிற சொல்லுக்கேற்ப பரிமாணம் மாறும். பஜ்ஜி மாவில் உருளைக்கிழங்கோ, வெங்காயமோ சேர்ந்தால் பஜ்ஜியின் தன்மை மாறுகிற மாதிரி)

இந்தப் பக்கங்களில் உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகும் விஷயங்கள் ஒவ்வொன்றுக்கும் ‘ஓ’வை எந்த தொனியில் பயன்படுத்த வேண்டும் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளலாம்.

அடுத்த இரு வருடங்களில் ‘ஓ’ பக்கங்களுக்கு கிடைத்த வாசகர் ஆதரவு எந்த அளவுக்கு இருந்தது என்றால், ஓரிரு வாரங்கள் ‘ஓ’ பக்கங்கள் வெளிவரவில்லையென்றால், வாசகர்களின் கற்பனைகள் சிறகு விரித்துப் பறந்து, என்னை பலத்த காயங்களுடன் பிரும்மாண்ட கட்டுகளுடன், ஏதோ ஒரு மருத்துவமனையில் அனுமதித்து விடும் அளவுக்கு இருந்தன.

இதற்கு காரணம் கறாராக கருத்தைத் தெரிவிப்பது, தனிப்பட்ட சுயநல நோக்கங்கள் ஏதும் இல்லாமல் பொதுநலம் கருதி மட்டுமே கருத்து தெரிவிப்பது முதலிய செயல்கள் தமிழகத்தில் அபூர்வமாக இருக்கும் சூழல்தான். ஒற்றைத் தனிக் குரலாக ஒலிக்கும் ‘ஓ’ பக்கத்தைக் கொண்டாடப்பட வேண்டியதாக ஆக்குகிறது. அதே தீவிரத்துடன் வசை பாடலுக்குரியதாகவும் ஆக்கியிருக்கிறது.

இரண்டாண்டுகள் கழித்து அக்டோபர் 2007ல், என்னுடைய ஒரு கட்டுரைக்கு, ஒன்று சேராத பிரமுகர்களையெல்லாம் ஒன்று திரட்டி, பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவில் ஒரு கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது. இதிலிருந்து மூன்று மாதங்கள் கழித்து முறையான காரணம் எதுவும் சொல்லப்படாமல் 'ஓ' பக்கங்கள் விகடனில் நிறுத்தப்பட்டன.

அதையடுத்து பிப்ரவரி 2008 முதல் 'ஓ' பக்கங்கள் குமுதம் இதழில் தொடர்ந்து வெளிவந்தும் கொண்டிருக்கின்றன. தமிழக இதழியல் வரலாற்றிலேயே ஓர் எழுத்தாளர் தன் பத்திப் பகுதியை ஒரு பத்திரிகையிலிருந்து இன்னொன்றுக்கு மாற்றிக் கொண்டது இதுவே முதல் முறையாகும். 'ஓ' பக்கங்களைப் பின் தொடரும் நிழலாக எண்ணற்ற வாசகர்கள் இருப்பதே தொடர்ந்து இந்தப் பகுதியின் வெற்றிக்குக் காரணமாகும்.

ரயிலில், தெருவில், சினிமா கொட்டகையில் என்னைத் தற்செயலாகச் சந்திக்கிற பல வாசகர்கள் பொதுவாக என் துணிச்சலைப் பாராட்டுகிறார்கள். அவர்களில் சிலர் 'எப்படி இவ்வளவு தைரியமா எழுதறீங்க?' என்று என் காதருகே வந்து ரகசியமாய்க் கேட்கிறார்கள்.

நான் எப்போதும் போலத்தான் இருக்கிறேன். மனதில் பட்டதை, என் பகுத்தறிவு கொண்டு முடிவுக்கு வந்ததைத் தயங்காமலும் கண்ணியமாகவும் அதே சமயம் கறாராகவும் சொல்லுவது என்பது 35 வருடங்களாக என் இயல்பு. இதில் எந்த மாற்றமும் இல்லை. மாற்றம் என்னைச் சுற்றி நிகழ்ந்திருப்பதுதான்.

அரசியல் என்றால் மோசமாகத்தான் இருக்கும். நாம் எதைப் பற்றியும் முணுமுணுப்பது கூட ஆபத்தானது என்ற மனநிலை சாதாரண நடுத்தர வகுப்பு மக்களிடையே கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளில்தான் மிக அதிக அளவில் பெருகியிருக்கிறது. இதை உருவாக்கிய முக்கியமான காரணங்களில் ஒன்று - இங்கே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி இரண்டிற்கும் இடையில் வித்யாசங்கள் குறைந்து கொண்டே வந்துவிட்டதுதான். ஆட்சியில் இருக்கும் போது எல்லாரும் ஒரே மாதிரி ஊழல் பேர்வழிகளாகவும் அராஜகவாதிகளாகவும் இருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் இருக்கும் போது இதே ஊழல், அராஜகங்கள் பற்றி ரொம்ப அலட்டிக் கொள்வதில்லை. ஒப்புக்கு எதிர்ப்பதாக பாவனை காட்டுகிறார்கள்.

பத்திரிகைகள், குறிப்பாக புலனாய்வு அரட்டை மன்றங்களாகிவிட்டன. எந்த சமூக, அரசியல் பிரச்சினையையும் ஆழமாக விவாதிப்பது, அலசுவது குறைந்துவிட்டது. பரபரப்பு, கிளுகிளுப்பு மட்டுமே பிரதான நோக்கங்களாகிவிட்டன. இப்படிப்பட்ட எழுத்தையே ரசித்துப் படிக்கும் பழக்கத்தையும் ஆழமாக எதையும் எதிர்பார்க்காத மனநிலையையும் அவை கணிசமான வாசகரிடையே ஏற்படுத்திவிட்டன.

என் 'ஓ' பக்கங்களைக் கூட சில வாசகர்கள் டைம் பாஸ் ஆகவோ,

காரமான சைட்டிஷ் போல மட்டுமோ பயன்படுத்துகிறார்களே என்ற கவலையும் அச்சமும் எனக்கு உண்டு. ‘நல்லா திட்டியிருக்கீங்க’, ‘இன்னும் திட்டியிருக்கலாம்’, ‘இந்த தடவை கொஞ்சம் டல்லு’ என்ற மாதிரி கமெண்ட்கள் சிலரிடமிருந்து கிடைக்கும் போது, இவர்களுக்காக ஏன் எழுத வேண்டும் என்ற மன அலுப்பு வருவதுண்டு.

இப்படிப்பட்ட மேலோட்டமான கமெண்ட்கள் இல்லாமல், எழுதப்பட்ட பிரச்சினை பற்றி விவாதிக்கும் சில வாசகர்களை சந்திக்கும் போது, அலுப்பு முற்றாக நீங்காவிட்டாலும், தொடர்ந்து எழுதுவதற்கான உத்வேகம் சற்றேனும் கிடைக்கிறது.

‘என்னை விமர்சித்தால் நீ என் எதிரியின் ஆள்; என் எதிரியின் கருத்தை விமர்சித்தால் நீ நம்ம ஆள்; எங்கள் இருவரையும் விமர்சித்தால், நீ இன்னும் ஆபத்தானவன்; அப்போதும் உன்னை ஒரு சார்பாக சித்தரித்து அவதூறு செய்வோம்” என்பதுதான் இங்கு நீண்டகாலமாக பொது வாழ்க்கையில் அணுகுமுறையாக இருந்து வருகிறது. இதைப் பொருட்படுத்தாமல் இயங்கும் மனநிலையை ஒருவர் அடையாவிட்டால், இயங்கவே முடியாமல் போய்விடும்.

இதிலிருந்து மீள்வதற்கு ஒரே வழி, நாம் யார் பக்கம் நிற்பது என்ற கேள்விக்கு பதில் மக்கள் பக்கம் இருப்பதுதான் ஒரே சரியான நிலை என்ற தெளிவுடன் செயல்படுவது மட்டும்தான். மக்களே மக்கள் பக்கம் நிற்காத அளவுக்கு மயக்கத்தை ஏற்படுத்தும் பொதுச் சூழலில் கூட, எல்லா தடைகளையும் தயக்கங்களையும் மீறி செயல்பட எனக்கு சாத்தியமாகியிருப்பது இந்த மனநிலையினால்தான்.

என்னுடன் உடன்படுபவரும் முரண்படுபவரும் தொடர்ந்து காட்டும் எதிர்வினைகளே என்னை செழுமைப்படுத்துகின்றன. எதுவும் பொது விவாதத்துக்கு உட்படுத்த வேண்டும் என்ற என் உறுதியான கருத்தை சாத்தியப்படுத்தி வரும் இரு சாராருக்கும் என் நன்றி.

குமுதம் இதழில் வெளிவந்து கொண்டிருக்கும் ‘ஓ’ பக்கங்களின் முதல் தொகுப்பு இது. இதனை சாத்தியப்படுத்திய குமுதம் நிர்வாகத்திற்கும், ஆசிரியர் குழு நண்பர்களுக்கும் என் நன்றி.

மௌனமாக ஒரு புதிய தலைமுறை, நாளைய மாற்றத்துக்காக திரட்டிக் கொண்டிருக்கும் பார்வைகளுக்கான தேடலில் ‘ஓ’ பக்கங்களும் ஒரு கருவியாக பயன்படுவதை அறியும் ஒவ்வொரு தருணமும் என்னை உற்சாகப்படுத்துகிறது. மீண்டும் நன்றி.

**ஞாநி**

**சென்னைக் கடலோரம்**

**அக்டோபர் 2008**